**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை,</u>**

**<u>கிருஷ்ணகிரி மாவட்டம்.</u>**

அசல் வழக்கு எண்.39/2013 நாள்: 22.07.2019

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர், நீதிமன்றத்தில் திரு.மாதையன் பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | |
|---|---|
| பெயர் | : கண்ணம்மாள் |
| கணவர் பெயர் | : சின்னபைய கவுண்டர் |
| கிராமம் : | தாலுக்கா : |
| வயது : | வேலை : |

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் வாதி தரப்பில் சாட்சியாக முன்னிலையாகி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள இந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும், என்னால் சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும். இதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு படித்து காட்டப்பட்டுள்ளது சரியாக இருந்தது. அதில்உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். இதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

1. 04.03.2013 தேதியிட்ட பட்டா எண்.8-ற்கான கணிணி சிட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும்,

2. 28.02.2013 தேதியிட்ட தாவா 2-ஆம் இனச்சொத்தின் சிட்டா நகல் வா.சா.ஆ.2 ஆகவும்,

3. 28.02.2013 தேதியிட்ட புல வரைபடம் கிராம நிர்வாக அலுவலரால் சான்றொப்பம் இடப்பட்டு வழங்கப்பட்ட உண்மை நகல் வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. எனவே பிராதில் வேண்டப்பட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டிக்கொள்கிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்படுகிறது.)